பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 04 வெள்ளிக்கிழமை 18.06.2021 கதிர் 225

### இனி இது ரகசியம் அல்ல!

சரித்திரம் மீளத் திரும்பும் என்பார்கள். அரசியலிலும் கூட அப்படி நடப்பதுண்டு.

தென்னிலங்கை அரசியலில் இடம்பெறும் சதுரங்க விளையாட்டைப் பார்க்கும் போது – சரித்திரம் மீளத் திரும்புகின்றதோ என்ற எண்ணம் பக்கம்02

# இலங்கை அரசின் கபடத்தனமான செயலைத் தடுத்து நிறுத்துங்கள்!

## இந்தியாவிடம் சுரேஷ் வேண்டுகோள்

(இ.கலையமுதன்)



இலங்கை அரசின் கபடத்தனமான நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய அரசிடம் நாம் கோருகின்றோம்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். 2

## நேற்று மட்டும் 2,361 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 361 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 2

## மேலும் 51 பேர் மரணம்; கொரோனா காவு 2,425

இலங்கையில் மேலும் 51 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2

## ஜூன் 22இல் கூடுகிறது கோப் குழு

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு, எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடவுள்ளது.

குழுவின் தலைவரான பேராசிரியர் சரித்த ஹேரத் 12

## கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை; ஜே.வி.பியினரின் நிலைப்பாடு என்ன?

### முடிவெடுக்கவில்லை என்கிறார் விஜித ஹேரத்



வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட வுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கவில்லை என்று ஜே.வி.பி. 12

## புயலில் சிக்கிய இந்தியப் படகுகளே புத்தளத்தில் கரை ஏற்றப்பட்டுள்ளன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 18

புத்தளத்தில் கடற்கரையில் ஏற்றப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட இந்தியப் படகுகள் இரண்டும் கடந்த மே மாதம் 11 ஆம் திகதியன்று கோவா ஆழ் கடலில் மீன்பிடியில் 12



## மருத்துவபீட ஆய்வுகூடத்துக்கு 48 இலட்சம் ரூபா பெறுமதியான ஆர்.என்.ஏ. இயந்திரம் அன்பளிப்பு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட கொரோனாப் பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு 4.8 மில்லியன் ரூபா பெறுமதியான தானியங்கி ஆர்.என்.ஏ. பிரிப்பு இயந்திரம் ஒன்று புலம்பெயர் தமிழரான சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவபீட கொரோனாப் பரிசோதனை ஆய்வுகூடத்தின் தேவை கருதி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி இந்த அன்பளிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தத் தானியங்கி ஆர்.என். ஏ.பிரிப்பு இயந்திரத்தை பல்கலைக்கழக மருத்துவ 12

## வடக்கில் 62 பேருக்கு தொற்று

யாழ். பரிசோதனைக்கூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 41 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 62 2

## கொரோனாவால் பெண் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த 60 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார் என்று யாழ்.போதனா 2

## 3 வாரங்களின் பின்னர் அரசடி முடக்கம் நீக்கம்!

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், நல்லூர் அரசடிப் பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கடந்த 28ஆம் திகதி முதல் முடக்கப்பட்டிருந்த நிலையில் இன்று காலை விடுவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

அரசடியில் கொரோனாத் தொற்றாளர்கள் 2

## சைக்கிளில் சென்றவர் மயங்கி விழுந்து சாவு!

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் திடீரென மயக்கமுற்று விழுந்து உயிரிழந்துள்ளார்.

புத்தூர் – நிலாவரை வீதி வழியாக நேற்றுக் காலை 40 வயது மதிக்கத்தக்க ஒருவர் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை திடீரென மயக்கமுற்று வீதியில் விழுந்துள்ளார்.

அவரை வீதியால் 12

## இணையத்தில் மது விற்பனைக்கு வராது

இணையவழி ஊடாக மதுபானங்களை விற்பனை செய்வதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி அனுமதி மறுத்துள்ளது என அதன் 2



## முழு அதிகாரப் பரவலாக்கத்தை இந்தியா விடாது வலியுறுத்தும்!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான நேற்றைய சந்திப்பில் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் தாயகப் பகுதிகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதை இந்தியா தொடர்ந்து விடாது வலியுறுத்தும்.

– இவ்வாறு இன்று நண்பகல் கொழும்பில் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் தெரிவித்தார் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், கூட்டமைப்புப் பிரதிநிதிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகிய ஐவரடங்கிய குழு நேற்று நண்பகல் கொழும்பில் இந்திய 12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
எனக்குள் ஏற்படுகின்றது.

இதோ ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியாக ரணில் நாடாளுமன்றுக்குள் நுழைகின்றார், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (எஸ்.ஜே.பி) தொலைந்தது, இரண்டாகப் பிளக்கின்றது, டசினுக்கும் குறையாத எம்.பிக்கள் ரணிலுக்குப் பின்னால் அணி வகுக்கின்றனர் – என்றெல்லாம் ஆளும் தரப்புக்குள் இருந்து கடந்த வாரம் ஆரவாரங்கள் வந்தன.

ஆனால் உண்மை நிலைமை தலைகீழ் என்பதுதான் யதார்த்தம்.

ரணிலுக்குப் பின்னால் போக ஐக்கிய மக்கள் சக்தியில் ஈ, எறும்பு கூட இல்லை. எதிரணி பக்கத்தில் இருந்து கொண்டு, இருபதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக விலை போன – 'அந்தர் பல்டி' புகழ் எம்.பிக்களை – வேண்டுமானால் ஆளும் தரப்பு மீண்டும் ஒரு தடவை இன்னொரு 'ரேட்'டுக்குப் பேரம்பேசி, விலைக்கு வாங்கி – அல்லது வாடகைக்கு அமர்த்தி – ரணிலுக்குப் பின்னால் போகப் பண்ணினால் உண்டு. அதைச் செய்விக்கவும் பஸில் ராஜபக்ஷவும் நாட்டில் இல்லை.

அப்படி இல்லாவிட்டால் நல்லாட்சி அரசில் 'நக்கிய' குற்றத்துக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் ரணிலுக்குப் பின்னால் அணி வகுக்க வேண்டும். அப்படி 'நன்றிக் கடன்' பற்றிச் சிந்தித்துச் செயற்படுபவர்கள் அல்லர் கூட்டமைப்பினர். இன்றைய அரசியலுக்கு எது தோதோ அதைச் செய்பவர்கள். ஆகவே இன்றைய நிலையில் அவர்களும் ரணிலுக்குப் பின்னால் போக மாட்டார்.

இன்றைய பத்திக்கு ரணில் விவகாரம் முக்கியமல்ல. அவர், வரும் 23ஆம் திகதி எம்.பியாகி விட்டுப் போகட்டும்.

அவரின் நாடாளுமன்ற வருகையோடு ஐக்கிய மக்கள் சக்தி பிளந்தது என்றார்கள் ஆளும் தரப்பினர். ஆனால் பிளவுறும் இக்கட்டில் இன்று சிக்கி இருப்பது ஆளும் தரப்புத்தான்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் இதோ வெடிப்பு என்று ஆளும் தரப்பினர் குரல் எழுப்ப, வெடிப்புக்கான ஏது நிலை ஆளும் தரப்பில்தான் பிரதிபலித்திருக்கின்றது.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எழுப்பிய எதிர்ப்பு தனி ஆவர்த்தனம் அல்ல. அதற்குப் பின்னால் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவான சில டசின் எம்.பிக்கள் இருக்கின்றார்கள் என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அந்தச் சிறிய பிளவை பெரும் வெடிப்பாக்கும் எத்தனமாகவே அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றுக்குக் கொண்டு வருகின்றது ஐக்கிய மக்கள் சக்தி கட்சி.

நல்லாட்சி அரசின் காலத்தில் இப்படித்தான் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிராக அப்போதைய எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணையை நகர்த்தியது. அந்தப் பிரேரணை மீதான விவாதத்திலும் வாக்கெடுப்பிலும் ரவி கருணாநாயக்கவின் பக்கம் நிற்கோம் என்று அவரது அரசின் தரப்பின் எம்.பிக்கள் பலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகவே தெரிவித்தனர். அதையடுத்து ரவி கருணாநாயக்காவை நிதி அமைச்சர் பதவியிலிருந்து விலகும்படி பணித்தார் பிரதமர் ரணில்.

அதே சரித்திரம் இப்போது மீண்டும் திரும்புவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று எனக்குத் தோன்றுகின்றது.

தற்போதைய அரசுக்குள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, ரிரான் அலஸ் போன்றோர் பஸில் ராஜபக்ஷவின் அதிகாரத்துக்கு சவாலாக எழுந்தபோது பஸில் கமுக்கமாக நடந்து கொண்டார். அமுக்கி வாசித்தார். இப்போது சந்தர்ப்பம் – வாய்ப்பு – கிட்டியதும் கைவரிசையை ஆரம்பித்துள்ளார்.

ஆளும் தரப்புக்குள் பஸிலின் ஒரு முகம்தான் கட்சிப் பொதுச் செயலாளர் சாகர காரியவசம். அவர்தான் இப்போது எரிபொருள் விலையேற்ற அறிவிப்புக்காக உதய கம்மன்பிலவுக்கு எதிராகப் பொங்கி எழுந்திருப்பவர்.

உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபைக்கு வரும் போது பஸில் விசுவாசிகளான எம்.பிக்கள் தமது கைவரிசையைப் பிரதிபலிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்போதுதான் உதய கம்மன்பிலவின் அரசியல் எதிர்காலம் தீர்மானமாகும். பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை.

– மின்னல் –

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக குறைந்தபட்ச அதிகாரங்களே வழங்கப்பட்டன. இந்த அதிகாரங்கள் இப்போது பறிக்கப்படுவதைப் பார்க்க முடிகின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. இது குறித்து தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவரது இல்லத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனாத் தொற்று நோய் காலகட்டத்தில் எல்லா நாடுகளும் முடக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு வேலைகளைச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அண்மையில் மாகாண பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றும் வேலைத்திட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் மாகாண சபைகள் எல்லாமே இல்லாமல் உள்ள சூழ்நிலையில், மாகாண சபைத் தேர்தல் காலவரையின்றி பிற்போடப்பட்டிருக்கின்ற சூழலில், மாகாண அதிகாரங்களை திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கில் இருக்கக் கூடிய பல முக்கியமான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

இப்போது வடக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய மாவட்ட வைத்தியசாலைகளில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு பொறுப்பேற்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த வைத்தியசாலைகளை மத்திய அரசு கையகப்படுத்த முழு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அவை நிறைவுபெற்றுள்ளன.

இலங்கை அரசு ஐ.நாவுக்கு இந்தியாவுக்கு தாங்கள் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம், மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவோம் எனக் கூறிக்கொண்டு – இப்போது உள்ள அதிகாரங்களை விட மேலதிகமான அதிகாரங்களை வழங்குவோம் எனக் கூறிக் கொண்டு – இப்போது இருக்கக்கூடிய அதிகாரங்களையும் தொடர்ச்சியாகப் பறிக்கின்ற நிலையையே எங்களால் பார்க்கக் கூடியதாவுள்ளது .

முக்கியமாக இந்த வைத்தியசாலைகளைப் பறிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஏற்கனவே மத்திய அரசின் கீழ் உள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகள் அனைத்தையும் மத்திய அரசு கையகப்படுத்தியுள்ளது.

மத்திய அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து உண்மையாகவே மாகாணத்திலுள்ள முற்றுமுழுதான அதிகாரங்களைப் பறித்தெடுத்து தமிழ் மக்கல என்ன காரணத்துக்காகப் போராடினார்களோ அதனைச் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

குறைந்தபட்சம் ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தம் ஊடாக சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த அதிகாரங்கள் இப்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அரசின் இவ்வாறான கபடத்தனமான நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய அரசிடம் நாம் கோருகின்றோம். – என்றார்.

## மேலும் 51 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உறுதிப்படுத்தலுடன் அரசதகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 425 ஆக அதிகரித்துள்ளது.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 33 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 95 ஆயிரத்து 434 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 245 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 44 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 18 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## இணையத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாட்டால் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் இணையம் ஊடாக மதுபானங்கள் விற்பனை செய்வதற்குக் கலால் திணைக்களம் திட்டமிட்டது. இதற்கு நிதி அமைச்சால் கொள்கை ரீதியில் அனுமதி வழங்கியது.

எனினும், இந்தத் திட்டத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட பல தரப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

இதனையடுத்து கொரோனாத் தடுப்புக்கான செயலணி அனுமதி வழங்கினால் மட்டுமே குறித்த சேவை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனினும், அதற்கான அனுமதியை வழங்க குறித்த செயலணி மறுத்துள்ளது.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 64ஆக உயர்வடைந்துள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## 3 வாரங்களின் பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அதிகளவில் அடையாளம் காணப்பட்டனர்.

அதனால் அரசடியில் வசிக்கும் மக்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டதுடன் அந்தப் பகுதி கடந்த மே 28ஆம் திகதி தொடக்கம் முடக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று காலை முதல் அரசடிப் பகுதி விடுவிக்கப்படுகின்றது.

அத்துடன், சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாவற்காடு கிராமம் முடக்கப்பட்டுள்ளது.



# இராணுவத் தளபதிக்கு வைரஸ் பற்றி தெரியாது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு



இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு கொவிட் வைரஸ் பற்றி எதுவும் தெரியாது என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்புக்குழுவின் பிரதானியாக இராணுவத் தளபதி செயற்பட்ட போதிலும் அவருக்கு வைரஸ் பற்றி எவ்வித புரிதலும் கிடையாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் தடுப்பூசிகளின் மூலம் ஒரு வருடம் மட்டுமே பாதுகாப்பு கிடைக்கும்.

ஓராண்டின் பின்னர் இந்தத் தடுப்பூசி மருந்தளவு ஒன்றை மீளவும் வழங்க நேரிடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை போன்ற நாடு ஒன்றில் ஆண்டு தோறும் தடுப்பூசி மருந்தளவுகளை மக்களுக்கு வழங்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 80 வீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டாலே வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

வைரஸை அழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது. வைரஸ் தொடர்பில் பேராசிரியரான தம்மிடம் அரசாங்கம் கொவிட் தொடர்பில் எவ்வித ஆலோசனைகளையும் இதுவரையில் பெற்றுக்கொண்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மட்டும் ஒரேயொரு தடவை தம்முடன் கலந்துரையாடினார் எனவும் தெரிவித்துள்ளார்.

# 4 மாத பயணக் கட்டுப்பாடு அல்லது ஊரடங்கு தேவை

## விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

4 மாதங்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை நீடிப்பது அல்லது கடுமையான ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி கடுமையான சட்டத்தை செயற்படுத்த நேரிடும் என பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகளை பொது மக்கள் புறக்கணித்து செயற்பட்டால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடுமையான சட்ட திட்டங்களை விதித்து கொவிட்டைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சித்தால், அதனால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு மிக அதிகம் என அவர் கூறியுள்ளார்.

தொற்றைக் கட்டுப்படுத்துவதென்றால் அனைவரும் பயணக்கட்டுப்பாட்டை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்பை குறைத்து, சீரான முறையில் வைரஸைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், பாரிய அளவிலான மக்கள் கட்டுப்பாடுகளை புறக்கணித்து செயற்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையால் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இருந்த காலப்பகுதியை அதிகரித்துள்ளது. வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றம் சென்று கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. மக்களே சரியான முறையில் செயற்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் நிலைமை தொடர்ந்தால் கடுமையான சட்டத்தின் கீழ் இதனைக் கட்டுப்படுத்த நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலையை அதிகரிக்க இது பொருத்தமான நேரம் அல்ல

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கருத்து

கொழும்பு, ஜூன் 18

பொருளாதார ரீதியில் மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பம் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான பொருத்தமான சந்தர்ப்பம் அல்ல என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

எனவே மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பும் வரையிலேனும் இந்த தீர்மானம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவிக்கையில் –

றாகம வைத்தியசாலையில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் என்பது ஏனைய பல விடயங்களுடன் தொடர்புடையதாகும். எனவே எரிபொருள் விலை அதிகரிப்புடன் ஏனைய பொருள்களின் விலைகளும் அதிகரிக்கக் கூடும். இவ்வாறான நிலைமைகளை கடந்த காலங்களில் நாம் அவதானித்திருக்கின்றோம். அத்தோடு கொவிட் அச்சுறுத்தலால் மக்கள் பொருளாதார ரீதியில் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பம் இதுவல்ல என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். இதனால் மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கக் கூடும். எனவே, வாழ்க்கைச் செலவு தொடர்பாக அமைச்சரவை உப குழுவால் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை மக்களின் வாழ்க்கை வழமைக்கு திரும்பும் வரையேனும் ஒத்திவைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

எவ்வாறிருப்பினும் சிலர் கூறுகின்றமையைப் போன்று அரசாங்கத்திற்குள் எவ்வித பிளவுகளும் இல்லை. பெருமளவானோர் ஒத்துழைப்புடனேயே செயற்படுகின்றனர். அதில் எவ்வித சிக்கலும் இல்லை. பஸில் ராஜபக்ஷ மக்களின் சார்பில் சிந்தித்து தீர்மானங்கள் எடுக்கக் கூடிய தலைவராவார். எனவே அவர் இருந்திருந்தால் சிலவேளை இந்தத் தீர்மானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். – என்றார்.




# சூரியசக்தி மின் உற்பத்தித் திட்ட மேம்பாட்டுக்கு இந்தியாவிடமிருந்து 10 கோடி டொலர் நிதியுதவி



'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்துக்கு அமைய, சூரிய சக்தியிலான மின் உற்பத்தியை அதிகரித்து, தேசிய மின் கட்டமைப்புக்கு மீள்பிறப்பாக்கச் சக்திவளப் பங்களிப்பை அதிகரிக்கும் திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, அரச கட்டடங்கள், சமய ஸ்தாபனங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் வீடுகளின் பங்களிப்பைப் பெற்று, சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் முக்கிய திட்டமாகும்.

இதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் வீடுகளுக்கான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அரச நிறுவனங்களில் மின்சாரத்துக்காக செலவாகும் அதிக தொகையைக் குறைப்பதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

காணித் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில், நீரில் மிதக்கும் சூரிய மின்சக்தி முறைமைகளை நிறுவுவதும் இதில் உள்ளடங்கும்.

இதன் முதற்கட்டமாக, நாடாளுமன்றத்துக்குத் தேவையான மின்சாரம், தியவன்னா ஓயாவை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும் திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் தேசிய மின் கட்டமைப்புக்குள் பிரவேசிக்க முடியாதிருக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு, மின்கலங்களின் மூலம் சூரிய மின்சக்தி களஞ்சிய வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்துக்காக, இந்திய அரசாங்கம் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கியின் ஊடாக, 10 கோடி அமெரிக்க டொலர்கள் கடனை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான இரு தரப்பு கடன் ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இந்தக் கடன் ஒப்பந்தம், புதன்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில், மின்சக்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் ஜனாதிபதி முன்னிலையில் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகலவுக்கும் இந்திய உயர் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இந்திய உயர் தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சமஷ்டியே தீர்வுக்கு வழி

மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வருகின்ற நடவழக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது

உண்மையில் இது மாகாணங்களுக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைப் பிடுங்கும் ஆட்சித்துறைத் துஷ்பிரயோகம்.

அதுவும் மாகாண சபைகள் இயங்காத சமயத்தில் – மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சபைகளில் இல்லை என்ற நிலைமையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு – மாகாண சபைத் தேர்தல்களை காலவரையின்றி தள்ளிப்போட்டு விட்டு – பேரினவாத அரசாங்கம் இந்தக் கைங்கரியத்தை முன்னெடுக்கின்றது.

இந்தியாவின் அழுத்தத்தினால் உருவாக்கப்பட்டது இலங்கை – இந்திய ஒப்பந்தம். அதன் ஒப்பந்த வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதே 13ஆவது அரசமைப்புத் திருத்தம்.

அதன் மூலம் மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்டவை என்று கூறப்பட்ட அதிகாரங்கள் இப்போது ஒவ்வொன்றாகப் பிடுங்கப்படுகின்றன.

மாகாணங்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட சில துறைகளில் சுகாதார சேவையும், பள்ளிக் கல்வியும் முக்கியமானவை.

சுகாதார சேவைகளில் முக்கிய இடம் வகிப்பவை வைத்தியசாலைகள். அது போன்றே பள்ளிக் கல்வியில் முக்கியமானவை பாடசாலைகள்.

இந்த இரண்டையும் தனது கைகளுக்கு மாற்றுவதன் மூலம் மாகாண சுகாதார மற்றும் கல்விச் சேவைகளை ஒன்றுமில்லை என ஆக்கும் திட்டத்தை கொழும்பு ஆட்சிப் பீடம் கட்டவிழ்க்கின்றது.

பிரபல பாடசாலைகளைத் தரம் உயர்த்துவது என்ற பெயரில் தேசிய பாடசாலை என சான்றிதழ் குத்தி அவற்றைத் தன் கட்டுப்பாட்டில் எடுக்கின்றது மத்திய கல்வி அமைச்சு.

அதேபோல மாவட்ட வைத்தியசாலைகளைத் தரம் உயர்த்துகின்றோம் என்ற பெயரில் மாகாண சுகாதார அமைச்சிடம் இருந்து பிடுங்குகின்றது மத்திய சுகாதார அமைச்சு.

இப்படி மாகாண அதிகாரங்களைப் பிடுங்குவது சட்ட ரீதியாகத் தவறானது. தார்மீக ரீதியில் முறையற்றது.

அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தும் சிறுபான்மை மக்களை அடக்கி, ஒடுக்கும் நயவஞ்சகத் திட்டத்தின் அங்கம்தான் இது என்பதில் சந்தேகமில்லை.

இந்த நீதிமுறையற்ற செயலுக்கு எதிராக நீதிமன்றுக்குப் போவது குறித்து தமிழர் தரப்பில் சிந்திக்கப்படுகின்றது.

அடக்கு முறையின் உச்சியில் – அதிகாரக் கொடூரத்தின் மத்தியில் – அதுவொன்றே தமிழருக்கு நிவாரணம் கேட்பதற்கான தளமாயினும், அதுவும் நம்பிக்கை தருவதாக இல்லை என்பது தான் யதார்த்த நிலைமையாகும். நமது பட்டறிவாகும்.

இலங்கையின் நீதித்துறை அப்படிப்பட்டது என்ற கசப்பான அனுபவம் – பட்டறிவு – உணர்வு – தமிழர்களுக்கு ஏற்கனவே தாராளமாக உள்ளது. அதை மறந்து நீதித்துறை மீது நம்பிக்கை வைப்பது அர்த்தமற்றது.

இது போன்ற விவகாரங்களில் நீதியாக – சட்டத்தின் படி – நடக்க முயன்ற நீதித்துறைக்கே நேர்ந்த அனுபவம் – விபரீதம் – யாது என்பது நமக்குத் தெரியும்.

சாதாரண ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் பகிரப்பட்டாலோ, பரவலாக்கப்பட்டாலோ, அவற்றை நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் மூலம் பிடுங்கி விட முடியும் என்பதுதான் சட்ட வலிமை.

இன்ன, இன்ன விடயங்கள், மாகாண சபைகளின் முன் அனுமதியின்றி மாகாண சபைகளிடமிருந்து மீளப் பறித்தெடுக்க முடியாது என்று சட்டத்தில் எழுதி வைத்து, அதை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்திய பின்னரும் கூட, அந்த அதிகாரங்கள் ஒரே நாளில் மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்டன.

அதனைத்தான் 'திவிநெகும' சட்டம் நிறைவேற்றப்பட்ட விடயத்தில் பார்த்தோம். அனைத்து மாகாண சபைகளின் அனுமதியுமின்றி இச்சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாது என்று தீர்ப்பளித்த பிரதம நீதியரசர், அதற்காக ஒரே நாளில் பதவியிலிருந்து வல்வந்தமாக – அச்சுறுத்தி – அகற்றப்பட்டார்.

இப்போதும் கூட மாவட்ட ஆஸ்பத்திரிகளை மாகாண சபைகளிடமிருந்து பிடுங்குவது நிறைவேற்று அதிகாரத்தின் வரம்பு மீறிய அத்துமீறல்.

நீதிமன்றத்துக்குப் போனால் இலங்கை நீதிமன்றம் அந்த முறையீட்டை ஏற்று அந்த நிறைவேற்றதிகார நடவடிக்கை சட்ட ரீதியில் தவறானது என உத்தரவிடக் கூடும்.

ஆனால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரணடு பங்கு வலுவை வைத்திருக்கும் ராஜபக்ஷக்களின் பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப்பீடம் குறுகிய காலத்தில் புதிய சட்டம் ஒன்றைக்கொண்டு வந்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் சட்ட ரீதியாக அந்த வைத்தியசாலைகளைப் பிடுங்கும் கைங்கரியத்தை ஒப்பேற்றும் என்பது நிச்சயம்.

நேற்றும் இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி, பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பிடுங்க முடியாதவாறு சமஷ்டி ரீதியிலான அதிகாரப் பரவலாக்கம் வந்தால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கான தீர்வை சிறுபான்மை மக்கள் பெறமுடியும். இல்லையேல் பரவலாக்கப்படும் அதிகாரங்கள், கைக்குக் எட்டியும் வாய்க்குக் கிட்டாத மாதிரி பறிபோவதைத் தடுக்க முடியாது.

## ரணிலின் பாதுகாப்புக் கடமைக்கு 100 இற்கும் மேற்பட்ட படையினர்

### அசோக அபேசிங்க கூறுகின்றார்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத் தரப்புடன் இரகசிய பேச்சுகளை நடத்தியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சில் அமைச்சர்கள் சிலரும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் சென்றுள்ளார்.

'நீங்கள்தான் நாடாளுமன்றத்துக்கு வர வேண்டும்' என இந்தச் சந்திப்பின் போது மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார் எனவும் அபேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான பின்னணியில், ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்த பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ரணிலுடன் இணையலாம் என்ற வதந்தியை அரசாங்கத் தரப்பினரே சமூக ஊடகங்களில் பரப்பியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க , ராஜபக்ஷவினருடன் உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டதை நன்கு அறிவார்கள்.

ரணில் விக்கிரமசிங்க தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கவில்லை என்றாலும் அவரது பாதுகாப்புக்காக 100 இற்கும் மேற்பட்ட படையினர் வழங்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரல்லாத ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருக்கும் உயர்மட்ட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்ஷ தரப்பினருக்கும் இடையில் இருக்கும் தொடர்புகள் காரணமாகவே இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன எனவும் அசோக அபேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## தனது பன்முகப்படுத்தப்பட்ட ஒரு கோடி ரூபாவை வறுமையில்வாடும் மக்களுக்கு பயன்படுத்த உதவுக

### விநோ எம்.பி. பிரதமரிடம் கோரிக்கை முன்வைப்பு

இந்த வருடத்துக்கான தனது பன்முகப் படுத்தப்பட்ட ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டை, வன்னி மாவட்டத்தில் பட்டினியில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், பிரதமருக்கு, அவர், கடந்த புதன்கிழமை அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் –

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வருடாந்தம் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் தலா ஒரு கோடி ரூபா நிதியை, கொரோனாத் தொற்றுக் காரணமாகவும், பயணக் கட்டுப்பாடு காரணமாகவும் வாழ்வாதாரத்தை இழந்து பட்டினியில் வாடும் ஏழைக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறும், இந்த வருடம் பட்டினிச் சாவுகளைத் தடுக்க இந்நிதிகளைப் பயன்படுத்துமாறும், குறிப்பிடப்பட்டுள்ளது.



அபிவிருத்தித் திட்டங்களை அடுத்த வருடமும் முன்னெடுக்க முடியும். பன்முக நிதி ஒதுக்கீட்டைக் கையாளும் நிதி அமைச்சர் என்ற வகையில் எனது 1 கோடி ரூபா நிதி மட்டுமல்லாமல், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் 225 கோடி ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டையும் அந்தந்த மாவட்ட கொரோனா நிதிக்காக, விடுவிப்பது காலத்தின் தேவை யாகும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஷானி அபேசேகரவின் பாதுகாப்பு குறித்து லசந்தவின் மகள் அச்சம்

பொலிஸாரால் நிரூபிக்கமுடியாத குற்றத்துக்காக சிறையில் அடைத்துவைக்கப் பட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் மென்டிஸும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தாலும் அவர்களது பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அஹிம்சா விக்கிரமதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

பொலிஸாரால் நிரூபிக்கமுடியாத குற்றத்துக்காக இலங்கையின் மிகச்சிறந்த குற்ற விசாரணை அதிகாரியான ஷானி அபேசேகர சுமார் ஒருவருடகாலம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவையும் சப் இன்ஸ்பெக்டர் மென்டிஸையும் பிணையில் விடுதலை செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானம் மன ஆறுதலையும் நம்பிக்கையையும் விதைத்தாலும், அவர்களின் பாதுகாப்புத்தொடர்பில் மேலும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

ஷானி அபேசேகர மற்றும் அவரின் கீழ் பணியாற்றிய குற்றப்புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் அச்சமின்றி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் காரணமாகவே எனது தந்தை லசந்த விக்கிரமதுங்கவிற்கும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ள முடிந்தது.

இந்த அதிகாரிகள் அவர்களது தைரியமான செயற்பாடுகளின் காரணமாக பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இத்தகைய துன்புறுத்தல்களை முறியடிப்பதற்காகப் பயணிக்கவேண்டியுள்ள நீண்ட பாதையில், ஷானி அபேசேகரவின் விடுதலை என்பது முதற்படி மாத்திரமேயாகும்.

வேறு எந்தவொரு தரப்பினரும் பதிலளிக்க முன்வராத சந்தர்ப்பத்தில், நீதியைப் பெறுவதற்கான எனது பிரார்த்தனைகளுக்கு ஷானி அபேசேகரவும் அவரது அதிகாரிகளும் பதில் வழங்கினார்கள்.

வரலாற்றின் வளைவுகள் அவர்களுக்கான நீதியை உறுதிசெய்வதை நோக்கி நகர்த்திச் செல்லும் என்று முன்னெப்போதையும் விட இப்போது அதிகமாக நம்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....

அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**தொகுப்பு:-**
**எஸ். வனோஜா**

## 24ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**231.** உலக சமுத்திர தினம் எப்போது?

**232.** கொரோனா பேரிடர் காலப்பகுதியில் மாணவர்களின் கல்விக்காக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் என்பன தேசிய ரூபவாகினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து முன்னெடுத்துவரும் திட்டத்தின் பெயர்?

**233.** வெகுவிரைவில் விண்வெளிக்குச் செல்லவுள்ளதாக தெரிவித்த Amazon நிறுவனத் தலைவர் யார்?

**234.** இஸ்ரேலில் அண்மையில் பதவியேற்ற புதிய பிரதமர் யார்?

**235.** 'கலிகால சாஹிதய சர்வக்ரு பண்டித' எனும் சிறப்புப் பெயரால் கௌரவிக்கப்படும் தம்பதெனியாவை ஆட்சி செய்த மன்னன்?

**236.** நோபல் பரிசினை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்ட பெண்மணி யார்?

**237.** 1,2,5,5,9,8,13,11,............... அடுத்துவரும் இரண்டு எண்களையும் எழுதுக?

**238.** இரத்த வகையில் அனைத்தும் வாங்கி என அழைக்கப்படும் இரத்த வகை எது?

**239.** ஆங்கிலேயர் இலங்கையை முற்றுமுழுதாக கைப்பற்றிய ஆண்டு எது?

**240.** ஒரு சமபக்க முக்கோணியின் சுற்றளவு அதன் பரப்பளவுக்குச் சமன் எனின் அதன் செங்குத்து உயரம் எத்தனை அலகுகள்?

பெயர் :- .................................................. அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................ மின்னஞ்சல் முகவரி:- ...............................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 22ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**211.** அலெக்சாண்டர் கிரகம்பெல்
**212.** 225
**213.** இங்கிலாந்து
**214.** கமலாஹாரிஸ்
**215.** 07
**216.** வியாழன்
**217.** ஹெரடோரஸ்
**218.** ஆசியாக் கண்டம்
**219.** ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
**220.** He ( ஹீலியம்)

## 16ஆம் திகதி வெளியான 22ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. வை. அபிமாறன் - கரவெட்டி
2. எஸ். ஸ்ரீ இராமச்சந்திரன் - வத்திராயன்
3. ஆர். மாலதி - உடுப்பிட்டி
4. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம்
5. ஆ. துஷான் - நீர்வேலி
6. ஜெ. வினோஜன் - குடத்தனை (09 சரி)
7. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (09 சரி)
8. கே. அனுசன் - ஏழாலை (09 சரி)
9. ஆ.கா.ஸ்ரீதரன் - கொழும்பு (08 சரி)

# பஸில் நாடு திரும்பியதும் நெருக்கடிக்கு தீர்வுகிட்டும்

## எஸ்.பி.திஸாநாயக்க நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 18

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிராக எதிர்த்தரப்பினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர முயற்சிக்கின்றமை பயனற்ற செயற்பாடாகும். நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடையும் என்பதை எதிர் தரப்பினர் நன்கு அறிவார்கள். பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டே எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி திஸாநாயக்க தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 21 மாத காலமாக எரிபொருளின் விலை அதிகரிக்கப்படவில்லை. எரிபொருள் விலையை அதிகரிக்காமல் இருந்தால் பொருளாதார மட்டத்தில் பாதிப்பு ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் ஆலோசனை வழங்கியமையைத் தொடர்ந்தே எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்ற விவகாரம் இன்று அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாகக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சியினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள். இது பயனற்ற செயற்பாடாகும். எரிபொருள் விலையேற்றத்தை அதிகரிக்கும் தீர்மானம் வலுச்சக்தி அமைச்சருக்குக் கிடையாது என்பதை எதிர்த்தரப்பினர் நன்கு அறிவார்கள். அமைச்சரவை மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்குட்படுத்த முடியாது. – என்றார்.

# கடலில் பரவியுள்ள இரசாயனத்தினை கண்டுபிடித்த பல்கலை விஞ்ஞானிகள்

கொழும்பு துறைமுகக்கடலில் தீப்பரவலுக்கு உள்ளான கப்பல் மூலம் கடலில் பரவியுள்ள இரசாயனத்தை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனைப் பயன்படுத்தி கொழும்பு துறைமுகக் கடலில் தீப்பரவலுக்கு உள்ளான கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கும் பகுதியில் இரசாயனங்களையும் எண்ணெய்யையும் பிரித்தெடுக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரதெனிய பல்கலைக்கழகத்தின் வேதியியல் பேராசிரியர் ஒருவர் இது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

புதிய முறை கடலுக்கு ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைத் தணிப்பது, எண்ணெய்க் கசிவைத் தடுப்பது மற்றும் எண்ணெயை சேகரிப்பது என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிராப்டி என்ற கனிமப் பொருளைக் கொண்டு செயற்படுத்தப்படும் இந்த முறை மூலம் கடலில் கசிந்த எரிபொருளை உறிஞ்சி எடுக்க முடியும். அத்துடன் உறிஞ்சி எடுத்த எண்ணெயை பயன்படுத்தவும் முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பெரதெனிய பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் காமினி ராஜபக்ஷ, பேராசிரியர் அமரசேன மற்றும் பேராசிரியர் டி.ஆர்.ஏ. குமார ஆகிய மூன்று பிரபல விஞ்ஞானிகள் நடத்திய ஆராய்ச்சியின் இறுதி முடிவிலேயே இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது.

# பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சிறுவன் மீட்பு

வறுமை பிடியில் வாடிய குடும்பம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட ஆண் குழந்தையை 5 வருடங்களாக பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய நபர் ஒருவர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு தற்போது வயது 16 எனத் தெரிவிக்கப்படும் நிலையில் சிறுவனின் நண்பன் ஒருவனையும் குறித்த சந்தேக நபர் வன்கொடுமைக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் புத்தளம், மதுரங்குளிய பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய் குடும்பத்தை விட்டுச் சென்றுள்ளார்.

பின்னர் சிறுவனின் தந்தை, நண்பர் ஒருவரின் உதவியுடன் சிறுவனை வளர்ப்பதற்காக தலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவருக்கு ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில், மற்றுமொரு சிறுவனை தேடித் தருமாறு குறித்த நபர் தெரிவித்துள்ளமையை தொடர்ந்து மதுரங்குளிய பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய மற்றுமொரு சிறுவனையும் குறித்த நபருக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத் துள்ளனர். எனினும், குறித்த சிறுவன் அங் கிருந்து தப்பிச் சென்றுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், முதலில் ஒப்படைக்கப்பட்ட சிறுவன் தான் முகங்கொடுக்கும் பாலியல் கொடுமைகளை பதிவு செய்து இரண்டாவது சிறுவனின் கைப்பேசிக்கு அனுப்பி வைத்துள்ளான்.

அதனைத் தொடர்ந்து தனது மகனுக்கு நேர்ந்த பாலியல் கொடுமைகள் தொடர்பில் சிறுவனின் தந்தை தலங்கம பொலிஸில் முறைப்பாடு ஒன்றைத் தாக்கல் செய்த நிலையில், சிறுவன் மற்றும் சந்தேகநபரான பாதுகாவலர் பொலிஸ்நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த சந்தேகநபரை கைது செய்து தலங்கம நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தோம் என தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 39

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**127. இதனை அவர்களுடனிருந்த மதியுரைஞர் பாலசிங்கம் கூடக் கண்டு கொள்ளவில்லையா?**

நான் அறிந்த அளவில் இப்படியான திட்டங்கள் தீட்டப்பட்டு நடத்தி முடிக்கப்படும் வரை அவை அரசியல் ரீதியாக அவருடன் ஆலோசிக்கப்படுவதில்லை. ஆகவே பிரேமதாஸவுடனான பேச்சுவார்த்தைகளுக்கு அமிர்தலிங்கம் தடையாகலாம் என்பதால் அவர் களையப்படவேண்டும் என்பது அத்தகைய ஆலோசனையின் பின்தான் செய்யப்பட்டதாக நான் அறிந்து கொள்ளவில்லை. அது அவர்களின் இராணுவ திட்டங்களின் கீழ் வரும் ஒரு செயல்பாடு. ஆகவே அது பற்றிய தகவல் செயற்படுத்தப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினரிடையே மட்டும்தான் ஒப்பேற்றப்படும் வரை அடங்கியிருக்கும்.

ஆனால் இந்தியப்படைகளை முற்றாக வெளியேற்றக் கேட்பதில் பின்விளைவுகள் இருக்கலாம் என்பதில் பாலசிங்கத்திற்கு தெளிவிருந்தது. அவர்களை வெளியேற்றிய பின் பிரேமதாஸாவும். ரஞ்சன் விஜயரத்னாவும் வேறு பல்லவிகள் பாடுவார்கள் என பாலசிங்கம் ஊகித்தார். இந்தியப் படைகள் வாபஸ் பெறப்படவேண்டும் என்று பிரேமதாஸ நிர்ப்பந்தப்படுத்திய காலத்தில் இந்திய அரசாட்சியின் சதுரங்கத்தால் ராஜீவ் பதவியிழுந்து வி.பி.சிங் பிரதமரானார். அவரோ ராஜீவுக்கு எதிர்மாறானவர். ராஜீவ் செய்தவையெல்லாம் பிழை அதற்கு நேர் மாறாகவே செயல்பட விரும்பினார். அதன் அடிப்படையில் பதவிக்கு வந்தவுடனேயே படைகளைத் திருப்பி பெறவேண்டும் என்று உறுதியளித்தார்.

அன்னை இந்திரா காந்திக்கு தமிழர் பால் இருந்த கரிசனை சிங்கிற்கு இருக்கவில்லை. தமிழர்கள் படும் இன்னல் பற்றியும், அமிர்தலிங்கம் போன்றோரிடம் தனக்கிருந்த நம்பிக்கைகளையும், அவர்கள் பாதுகாக்க வேண்டும் எனத் தனது பிள்ளைகள் ராஜீவ்,சஞ்சயுடன் நாளும் பொழுதும் சாப்பாட்டு மேசைகளில்,இரவும் பகலும் பேசிய மாதிரி அவற்றை அவர் சிங்கிடம் கதைப்பதற்கு வாய்ப்புமில்லை, தேவையுமிருக்கவில்லை. சிங்கிற்கு ஈழத்தமிழர்கள் பற்றி இருந்த புரிந்துணர்வு ஓர் அயல் நாட்டுக்குள் இருக்கும் இனப்பிரச்சினை தங்கள் நாட்டிலே இருக்கும் பலவற்றை போன்றதொன்று, இதற்காக ராஜீவ் படைகள் அனுப்பியிருந்தார் என்பதே. ஆகவே பதவிக்கு வந்தவுடனேயே ராஜீவ் எடுத்த தீர்மானங்கள் பலவற்றை மாற்றியதில் ஒன்றாக படைகளை திரும்பப் பெறுவேன் என்று அறிவித்தார். ஆனால் அதிலும் இந்தியாவின் பிரதமராக தாங்கள் சமரசம் பேச சென்ற இரண்டு பகுதியினரிடமும் குட்டு வாங்கி அவமானப்படுகிறோம் என்ற வன்மம் இருந்தது. படைகளை திரும்ப வாங்குவேன் என அறிவித்து விட்டு ஒன்றிணைந்து இயங்கிய வரதராஜப்பெருமாளைத் தலைவராகக் கொண்டிருந்த – வடகிழக்கு மாகாண சபை பற்றி அவரோடும், பிரபாகரனுடனும் பேசச் சொல்லி தி.மு.க. தலைவர் முதலமைச்சர் கருணாநிதியைக் கேட்டார். அதற்காக பாலசிங்கம் யோகியுடன் சென்னை சென்ற போது பாலசிங்கம் கருணாநிதியை சிங்குடன் பேசி முழுப்படைகளையும் திருப்பி அழைக்காது சிறிது சிறிதாக மீளப் பெறுமாறு கேட்டார். பிரோமதாஸாவில் முழு நம்பிக்கை இல்லை எனவும் அவருடன் திட்டமாக ஒரு ஏற்பாட்டுக்கு வரும் வரை முழுதாக இந்தியப்படைகள் வெளியேறுவது புத்தியல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. கருணாநிதியோ இது வி.பி.சிங் – ராஜீவ் இடையே இருக்கின்ற அரசியல் சதுரங்கப் போட்டியின் விளைவு. தனக்கு முடியாது, எனினும் அவருடன் சந்திப்பை ஏற்படுத்துகிறேன், நீங்களே நேரடியாகப் பேசிப்பாருங்கள் என்று கூறி அந்தச் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தி கொடுத்தார். சிங் அப்படியான ஒத்துழைப்புக்கு மறுத்து விட்டார். முதல்வர் கருணாநிதி தனது அரசியலுக்காக, திரும்பி வந்த இந்தியப் படைகளை வரவேற்காமலும் அவர்களுடன் அழைத்து வரப்பட்ட ஈழ அகதிகளைத் தமிழ் நாட்டில் இறங்க விடமாட்டேன் என்ற பலத்த பிரச்சாரம் செய்தார். அது அந்த நாள்களில் கருணாநிதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வளர்ந்திருந்த உறவின் அடிப்படையில் நடந்தது. அந்த ஆத ரவுகளினாலேயே அல்லது கண்டுகொள்ளாத ஒழுங்குகளினாலேயோ சென்னையில் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தலைவர் பத்மநாபாவும் தோழர்களும் கொல்லப்பட்டனர். தொடர்ந்த அரசியல் மோதல்களில் ஜெயலலிதாவின் உந்துதலில் கருணாநிதியின் தி.மு.க. அரசாங்கத்தை வி.பி.சிங் கலைத்தார்.



Mr J.N. Dixit with the LTTE Supremo Pirabakaran and Maj. Gen. Harkirat Singh, GOC IPKF after the conference on 26 September 1987.



முள்ளிவாய்க்கால் அவலங்கள் நடந்த போது கருணாநிதி ஒருநாள் உண்ணாவிரதத்துடன் தன் பிராயச்சித்தத்தை முடித்தார்.

ஜெயலலிதா தமிழ் நாட்டு சட்டமன்றத்தில் தமிழ் மக்களுக்கு நடப்பது இனப்படுகொலை என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி புதுடில்லிக்கும், சர்வதேசத்துக்கும் அறிவித்தார்.

ஆனாலோ, காரியசித்திக்கும் நிதர்சனத்துக்கும் நரசிம்மராவினதும்,பாலசிங்கத்தினதும் அணுகுமுறை புறக்கணிக்கப்பட்டது. சிங்கினது சந்திப்பை ஒட்டி பாலசிங்கத்துக்கும், விடுதலைப. புலிகளின் அரசியல் பிரிவை ஆண்டவர்களுக்கும் சில கசப்புணர்வுகள் உருவாகின. அவைகளை ஒட்டியே ஜெனிவாவுக்கும் பின்னைய பேச்சுகளுக்கும் துணையாக மேலும் புத்திஜீவிகளை அவர்கள் தேடினார்கள்.

அப்படியானால் தமிழ்த்தேசிய தலைமைகள் சில மாதங்களுக்கு முன் கூட்டமாக மனித உரிமைகள் மன்றுக்குக் கொடுத்த தீர்மானமும் இப்பொழுது அவை எடுக்கும் நிலைப்பாடுகளும் முரண்பட்டவையா?

இவை எவையுமே ஒரு பொது நிலைப்பாட்டில் எடுக்கப்பட்டு சர்வதேசத்துக்கு முன்வைக்கப்படுவதில்லை. அந்தந்த நேரத்து அவியல்கள்தான். அந்த அரசியல்களிலேயே கருத்து வேற்றுமைகள் வெளிப்படுகின்றன.

தற்சமயம் இந்தியாவுடனான சர்வதேசத்தையோ அல்லது இந்தியாவை விலத்திய ஒரு சர்வதேசத்தில் தான் நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அப்படி நிலைமைகள் இருக்கும் போது எமது காய்கள் அவற்றை நோக்கி நகர்த்தப்படவேண்டுமேயெழிய இவர்களை நோக்கியல்ல.

வெய்யில் எறிக்கும் போதுதான் நாம் கூரையைப் பிரித்து திருத்தம் செய்ய வேண்டும் அல்லது புதிதாக வேய வேண்டும். வெய்யிலை விட்டு, அந்நேரம் நிழலில் ஒதுங்கி விட்டு, மழையில் வீடு ஒழுகும் போது கூரையைப் பிரிக்க முடியாது. அது அனுபவத்தில் முட்டாள்தனம். இந்திய ஒப்பந்தம் தமிழர்களுக்கு வைக்கப்பட்ட ஒரு பொறி என்று 2012 வரை தமிழ்த் தேசியத்தின் தலைவர்களினாலேயே வெளிப்படையாகப் பேசப்பட்டது. அப்பொழுது ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்திய ஒப்பந்தத்தில் மேலான ஒரு தீர்வினை பேசியிருக்கிறோம், கையெழுத்துப் போடுவதுதான் பாக்கி என சொல்லப்பட்டு, இந்தியாவுடன் ஏதும் அணுகுமுறைகளை ஆரம்பிக்க ஏற்படுத்தப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. பின்னர் மஹிந்த ராஜபக்ஷவை தங்கள் நலத்துக்காக வீழ்த்த எடுத்த முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்து, மைதத்திரியையும் – ரணிலையும் பதவிக்குக் கொண்டு வந்து, ‘எக்கிய ராஜ்ய’வுக்குள் தீர்வு என்றும், புதிய அரசியல் சட்டமைப்பு வரும் என்றும், குடுகுடுப்பை ஜோசியங்கள் சொல்லி, அதுவும் வராமல், கைதிகளை விடுவிக்கவோ, தமிழ் பகுதிகளுக்கு வரவேண்டிய அபிவிருத்தி திட்டங்களைக் கையேற்று நடைமுறைப்படுத்தவோ திராணியற்று பேச்சிலேயே காலம் கழிந்தது.

இவற்றுக்காக மற்றவர்கள் மனம் நொந்து மூக்கை நுழைக்க வேண்டும் என்றில்லை. இவையெல்லாம் நாம் வழமையாக நடத்திய அரசியல் தர்பார்கள் தான்.

தமிழ்த் தேசியத்தின் ஓர் அங்கமான இன்னொரு கட்சி எமது கட்சியை விட முன்னேறி விடுமோ, அதற்கு இடம் கொடுக்க கூடாது, நாம் இவரின் மூலமே இதைப் பெறுவோம் அல்லது அவரின் மூலம் அது கிடைக்கலாம் என்ற நிலைப்பாடில்லாத தன்மை. எமது கமக்கட்டுக்குள் இருக்கும் பொதியில் தான் தீர்வுண்டு, அதைத் தற்சமயம் அவிழ்த்தால் மற்றவர்களால் குழம்பிப் போகும் என்று அவிழ்ப்பதே இல்லை. மக்களின் கருத்துக்களைக் கேட்பதேயில்லை. பொது நிலைப்பாட்டுக்கு வழிதேடுவதும் இல்லை.

(வளரும்....)

# இலங்கைச் சிங்களவர் சீனாவுக்கு எதிராக போராட வேண்டிய காலம் விரைவில் வரும்

## அம்பாறையில் வைத்து சுகாஷ் ஆரூடம்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை அரசு கொழும்பில் சீன ஈழத்தை (துறைமுக நகரம்) வழங்கியுள்ளது. இதனால் இலங்கை வாழ் சிங்கள மக்கள் சீனாவுக்கு எதிராகப் போராடவேண்டிய காலம் இனி வரும். இனி மேல் தான் இதன் விளைவை இலங்கை அரசு அனுபவிக்கும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர் -

நான்காம் கட்டமாக எங்களின் நிவாரணப்பணி அம்பாறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் யாழிலிருந்து மலையகத்தை நோக்கிச் சென்ற எங்களின் நிவாரணப்பணியின் போது இருந்த சோதனைச் சாவடிகளுக்கும், மலையகத்திலிருந்து அம்பாறைக்கு வரும் போது இருந்த சோதனைச் சாவடிகளுக்கும், நிறையவே வித்தியாசம் இருந்தன.

அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் அறிந்த வரை நிறைய சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. எங்களின் பயணங்களின் போது நாங்கள், வெளிநாட்டு பயணிகள் சுதந்திரமாக வீதிகளில் உலாவித்திரிகின்றமையையும், பணக்காரர்கள் நட்சத்திர விடுதிகளில் மகிழ்வுடன் இருக்கின்றமையையும் கண்டோம்.

இந்த பயணத்தடையில் அப்பாவி மக்கள் கடுமையாக வதைக்கப்படுகிறார்கள். எவ்வித முறையான நிவாரணங்களும் வழங்கப்படாமல் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளார்கள். இது முட்டாள்தனமாக உள்ளது. கொரோனாவிலிருந்து தப்பினாலும் பசியால் தற்கொலை செய்யும் நிலையே இன்று உருவாகி வருகிறது.

மேலும் அரசால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா உதவித்தொகை தகுதியானவர்களில் 10 வீதமானவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 90 சதவீதமானவர்களின் நிலை என்ன? யாரும் பசியுடன் இருக்கக் கூடாது என்பதற்காக நாங்கள் வீதிக்கு இறங்கி களப்பணி செய்கிறோம்.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்ட நாங்கள் செய்ததை காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 மடங்கு செய்திருக்க வேண்டும். செய்தார்களா? இல்லை அரசுடன் இருக்கும் டக்ளஸ், அங்கஜன், பிள்ளையான், வியாழேந்திரன் என யாராக இருந்தாலும் இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்த உதவிகள் தான் என்ன? இவர்கள் அமைச்சர்களாக இருந்து இராஜாங்க அமைச்சர்களாக இருந்து தமிழர்களுக்காகச் சாதித்தது என்ன? குறைந்தது மக்களின் பசியையாவது போக்கினார்களா?

சுகாதாரத் துறை பற்றிய பூரண அறிவு எனக்கு இல்லாது போனாலும் பகுத்தறிவின் படி கொரோனாத் தொற்று உயிரிழப்பு அறிக்கைகளில் மிகைப்படுத்தல்கள் உள்ளதை உணர முடிகிறது. அது மட்டுமன்றி கொரோனா அறிக்கைகளிலும் குழப்பநிலை இருக்கிறது. பெறுமதியான தமது உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள எல்லோரும் சுகாதார வழிமுறைகளைப் பேணி நடக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# பயணத் தடை விதி மீறல் கல்முனையில் நடவடிக்கை





(பாறுக் ஷிஹான்)

அரசின் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தி பிரதேச மக்களை கொவிட் தொற்றில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் பயணத்தடை மீறிய பலர் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று புதமன்கிழமை திடீரென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. சுகுணன் தலைமையிலான குழுவினர் காலை முதல் பெரியநீலாவனை, மருதமுனை, கல்முனை வரையிலான பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் பயணம் செய்த பாதசாரிகள் மற்றும் வாகனங்களை பரிசோதனை செய்து உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்தவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்தமையுடன் சிலருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பிரதான வீதிகளில் பயணம் செய்த வாகனங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரது பயண அனுமதிப் பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டு இருந்ததுடன் அனுமதிப் பத்திரங்களை முறையாகப் பெற்று பயணிக்காத நபர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு எச்சரிக்கை செய்து அனுப்பி வைக்கப்பட்டு இருந்தனர்.

கல்முனை பிராந்தியத்தில் கொரோனாத் தொற்று தீவீரமடைவதைத் தொடர்ந்து அதனை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த பிரதேசத்தில் கொவிட் 19 தொற்றைத் தடுத்து பிரதேச மக்களை நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் தொடர்ந்தும் இவ்வாறான வீதிச் சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட் தொற்று ஏற்படாது பாதுகாப்பதற்கு பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இத்திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம் அஸ்மி உட்பட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், இராணுவம் கூட்டாக இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

# தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக நியூஸிலாந்தில் பயிற்றுவிக்கக் கோரிக்கை

நியூசிலாந்தில் இயங்கிவரும் தமிழ் மொழிக்குழு, அந்நாட்டு கல்வித்துறையின் பாடத்திட்டத்தில் தமிழ் மொழியை இரண்டாவது மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, மவுண்ட் ரோஸ்கில் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் மைக்கல் உட் முன்னிலையில், அண்மையில் விளக்கக் காட்சி ஒன்றைத் தமிழ் மொழிக்குழு காட்சிப்படுத்தியது.

போக்குவரத்து, அலுவலகத் தொடர்பு மற்றும் மனிதநல பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளின் அமைச்சர் மைக்கல் உட், நியூசிலாந்து நாட்டில் இயங்கிவரும் தமிழ் சார்ந்த அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழியை நியூசிலாந்து பாடத்திட்டத்தில் இணைப்பது தொடர்பாக விளக்கக் காட்சி ஜூன் 11, 2021 அன்று அமைச்சர் உடனான சந்திப்பின் போது அவர்களுக்கு நன்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த விளக்கக்காட்சி அமைச்சர் மற்றும் நியூசிலாந்து தமிழ் மொழி குழுவிற்கு நிறைவைத் தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த அமைப்பு அமைச்சரை இந்தக் குழுவின் கௌரவ ஆலோசகராகப் பணியாற்ற கேட்டுக் கொண்டதற்கு அமைய அவர் ஒப்புதல் அளித்ததற்கு தமிழ் மொழிக் குழு தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் மீறி தனியார் வகுப்பு 31 பேருக்குக் கொரோனாத் தொற்று

கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் தனிமைப் படுத்தல் விதிகளை மீறி நடத்தப்பட்டு வந்த தனியார் வகுப்பில் இருந்த 58 பேரில் 31 பேருக்கு கொவிட் -19 தொற்று உறுதியாகியுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து கட்டுகஸ்தோட்டை, ரனவன வீதியில் தங்குமிடத்துடன் நடத்தப்பட்ட தனியார் வகுப்பொன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

அங்கு 52 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வந்துள்ளனர். க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்தியடையாத மாணவர்கள் சிலருக்கே இவ்வாறு பெற்றோரின் அனுமதியுடன் தங்கவைக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன.

அதில் ஒரு மாணவனுக்கு சுகவீனம் ஏற்பட்டதன் விளைவாக அவர் சிகிசைக்காக சேர்க்கப்பட்டபோது கொவிட் தொற்று உறுதியானது.

இதனையடுத்து பொலிஸாரும் சுகாதார அதிகாரிகளும் இணைந்து மேற்படி இடத்தை முற்றுகையிட்டனர். இதன்போது அங்கு 52 மாணவர்கள் தங்கி கல்வி கற்ற விடயம் தெரியவந்தது.

52 மாணவர்களும் 6 ஆசிரியர்களுமாக 58 பேரும் அந்த இடத்திலே தனிமைப்படுத்தப்பட்டதுடன் அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர்களில் 31 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### பூச்சி கொல்லிக்கும் பூச்சி விரட்டிக்குமான வேறுபாடு

உலகில் எண்ணிலடங்காத சூழற்தொகுதிகள் உண்டு வேறுபட்ட பல இனங்களைக் கொண்ட அங்கி கூட்டத்தை ஒரு சூழற்தொகுதியாகும்.

அவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகள் மூலம் இவற்றினது சமநிலை எய்தப்படும். இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் போது அந்த சூழற்தொகுதி சமநிலையை நோக்கி நகரும்.

ஒரு வயலில் நெல்லைத் தவிர நூறுக்கும் மேற்பட்ட அங்கிகள் காணப்படுகின்றன. இவற்றுக்கிடையில் இரைகௌவி பிரிகையாக்கிகள், ஒன்றிய வாழிகள், உணவுப் போட்டிகள், நோயாக்கிகள் போன்ற உயிரிடைத் தொடர்புகள் காணப்படுகின்றன.

ஒரு வயல் தொகுதியை ஒரு சூழற்தொகுதியாக கருதமுடியும். நாம் நமது உணவுத் தேவைக்காக தெரிவுசெய்து செய்கை பண்ணும் வயலில் ஏராளமான நமக்கு நன்மை செய்யும் பூச்சிகளுடன் சில தீங்கு பயக்கும் பூச்சிகளும் காணப்படுகின்றன.

இரசாயன பூச்சிக்கொல்லி பூச்சிகளைக் கொல்லும். ஆனால் பூச்சி விரட்டிகள் பூச்சிகளை விரட்டுபவையாகும்.

வயலில் காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகளையும் தீமை செய்யும் பூச்சிகளையும் இரசாயன பூச்சிக் கொல்லி கொள்ளும். நன்மை செய்யும் பூச்சிகள் இரசாயனத்தால் அழிக்கப்படுவதால் இயற்கைச் சமனிலை பாதிக்கப்பட்டு வயிலில் நோய்த் தாக்கம் அதிகரிக்கும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

14

- வே.வரதசுந்தரம் -




**தீமைதனைக் கண்டால்**
**வீறுகொண்டு எழுவேன்**
**சூலமுண்டு பயமில்லை**
**ஆச்சிநீ காளி!**

**ஆத்தாள்! ஆத்தாளென்றும்**
**காத்தாள்! காத்தாளென்றும்**
**கதறினோம் கேட்டிலையோ**
**ஆச்சிநீ காளி!**

இவ்வாறு உளமுருகி அம்பாளை ஏத்தித் தொழுத அம்பாள் அடியார்கள், திருகோணமலை மண்ணின் மைந்தன், தமிழ்கூறும் நல்லுலகு போற்றும் மூத்த தமிழ்ப்பத்திரிகையாளர், எனது பத்திரிகைத்துறை ஆசான், சாயி அன்பர் திரு.எஸ்.டி.சிவநாயகம் ஐயா அவர்கள் கூறும் திருகோணமலை பத்திரகாளி அம்பாள்பற்றிய அனுபவத்தை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்வர்.

'காளிதேவி வணக்கம் சிறுதெய்வ வணக்கத்தின் பாற்பட்டது எனச் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறு. காளி ஆதிபராசக்தியின் அம்சம் என்பதுதான் பெரியோர்கள் கண்ட முடிவு.

சுவாமி இராமகிருஷ்ன பரஹம்சர் காளி உபாசகராகவே தனது ஆன்மீக வாழ்வை ஆரம்பித்தார். காளி தேவி அவரோடு பேசும் தெய்வமாக, வாழும் தெய்வமாக, உயிர்த் துடிப்போடு விளங்கினாள்.

'கடவுளைக் காட்ட முடியுமா?' என்று கேட்ட நரேந்திரனுக்கு 'ஆம்' என்று பதிலளிக்கும் துணிவைக் கொடுத்தவள் காளி மாதாவேதான். கல்கத்தா நகரில் உள்ள காளி விக்கிரகத்தின் மூக்குத் துவாரத்தின் முன்னால் ஒரு துரும்பை நீட்டினார் இராமகிருஷ்ணர். காளியின் சுவாசம் பட்டதும் அந்தத் துரும்பு முன்னும் பின்னுமாக அசைந்தது. அந்தக் கணமே தெய்வம் என்றொரு சக்தி உயிரோடிருப்பதை நரேந்திரன் உணர்ந்தான்.

அதுவரை தெய்வம் உண்டா, இல்லையா என்ற சந்தேகத்தில் தவித்த நாஸ்திகரான நரேந்திரன் பின்னர் சுவாமி விவேகானந்தர் ஆனார். அமெரிக்க நாட்டில் இந்துமதத்தின் சிறப்பினை முழங்கினார். உலகு வியக்கும் ஞானத் துறவியானார். இது காளிதேவி அன்றளித்த பிச்சைதான்.

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் சக்தி, எங்கும், எதிலும் நிறைந்த ஆதிபராசக்தியே. அந்த நிறைவான சக்தியின் தோற்றமே காளிதான். இந்த மகாதத்துவத்தை வரகவி சுப்பிரமணிய பாரதி தனது கவிதையில் நான்கு வரிகளில் தேங்கிநிற்குமாறு செய்துவிட்டார்.

**யாதுமாகி நின்றாய் - காளி**
**எங்கும்நீ நிறைந்தாய்**
**தீதுநன்மை எல்லாம் - காளிநின்**
**தெய்வ லீலையன்றோ?**

இவைதான் பாரதி பாடிய அந்த ஞானபூர்வமான வரிகள். இந்த வரிகள் மூலம் அகண்டாகராகமாக



நிறைந்த தெய்வசக்தியே காளி என்பதையும், அண்டசராசரங்களில் இடம்பெறும் இயக்கங்கள் அனைத்துக்கும் உந்து சக்தியாக விளங்குபவளும் காளிதான் என்பதையும் பாரதி ஒருபெரும் தத்துவமாகவே கூறிவிட்டார்.

இவ்வளவு சக்திவாய்ந்த காளிதேவிக்குத் திருகோணமலையிலும் ஓரற்புத ஆலயம் அமைந்திருக்கின்றது.



அது மிகவும் சக்திவாய்ந்த ஆலயமென்பது எமது முன்னோர் அனுபவத்தில் கண்ட உண்மையாகும்.

காளிதேவி பற்றிய பாடல்களில் என. மனம் பதிவுற்றமைக்கு ஒருவித சைகோலொஜிக்கல் காரணமும் உண்டு. திருகோணமலை சிவன் கோயிலடியிலிருந்த எங்கள் வீட்டிலிருந்து பெரியகடை பகுதியில் அப்போதிருந்த செண்ட்ஜோசப் கல்லூரிக்குப் பெரும்பாலும் பக்கி வண்டியில் செல்வது வழக்கம். சிலசமயம் நடந்து செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறு நடந்து செல்லும்போது, பெரியமைதானத்துக்கு அடுத்துள்ள பாதையில் காளிகோயிலைச் சந்திக்க வேண்டிவரும்.

காளிகோயிலில் தீபாராதனை நடைபெறுவது தெரியும். தீபாராதனை தெரிந்தால், ஒருகும்பிடு போட்டு விட்டுப் போவது தினமும் நிகழும் ஒரு சம்பவமாகும். சின்ன வயதில் அப்படிக் காளியைக் கும்பிட்டமைக்குக் காரணம் இருந்தது. காளிகோயிலைத் தாண்டியதும் கரிக்கோப்பு என்ற ஒரு கிறிஸ்தவ சவச்சாலை உண்டு. அந்த சவச்சாலையைப் பற்றிப் பலபல பயங்கரக் கதைகளைக் கல்லூரி சகமாணவர்கள் கட்டவிழ்த்துக் கொண்டிருப்பார்கள்.

அந்த நாள்களில் இப்போதுபோற் சனப்புழக்கமும் லைட்வெளிச்சமும் இல்லாத நாள்கள். எனவே சுயபாதுகாப்பினை நாடி, காளியை வேண்டி, நெஞ்சில் உருவாகும் பயத்தைப் போக்கிக்கொண்டு தொடர்ந்து நடப்பது வழக்கம். இந்தப் பின்னணியில் பாரதியின் 'காளிப்பாட்டு' முதலில் நெஞ்சைத் தொட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா! இந்தப் பாடல்களையே நவராத்திரி காலத்தில் துர்க்கைக்கு உரிய முதல்மூன்று நாள்களிலும் இசையோடு பாடிவந்தேன்' - என்கிறார் சிவநாயம் ஐயா.

இதனையடுத்து அம்பாள் அடியார்கள் குமரகுருபரரின் வரலாற்றினை அறிந்து மகிழ்வர். 'கந்தர்; கலிவெண்பா' பாடி ஊமைநோய் நீங்கிய முருகபக்தர் குமரகுருபரர் அம்பாள் உபாசகர், அம்பாளை வழிபட்டு அவளருள் துய்த்தார். கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐந்து வயதுவரை ஊமையாக இருந்த குமரகுருபரர் திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் பய பக்தியுடன் வேண்டுதல் செய்து 'கந்தன் கலிவெண்பா' பாடி பேசும்சக்தி பெற்றார்.

அதற்கப்பால், அம்பாள் உபாசகரான குமரகுருபரர் மீனாட்சி பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தத்தைப் பாடியருளினார். அம்பாளை வளரும் சேயாகக் கற்பனை செய்து, பருவங்கள் காட்டிப் பாடுதல் பிள்ளைத்தமிழ் மரபு. மீனாட்சி பிள்ளைத்தமிழ் அரங்கேறியவேளை ஓரற்புதம் நிகழ்ந்தது.

'வருகைப் பருவம்' குறிக்கும் பாடலைப் பாடுகிறார்



அவர், 'தொடுக்கும் கடவுட் பழம்பாடல்' என்று தொடங்கும் பாடலைப் பாடித் துதிக்கின்றார். அப்போது, கோயிற் குருக்களின் குழந்தையின் வடிவில் அம்பாள் தோன்றி குமரகுருபரர் கழுத்தில் முத்துமாலை அணிந்து விட்டு மறைகின்றாள்.

இவ்வாறு அம்பாளை உள்ளத்திருத்தி, பயபக்தியுடன், மனங்கனிந்து நாம் பாடும் பாடல்களுக்கு காளி ஆச்சி செவிசாய்ப்பாள். அருள் சொறிவாள் என்பது திண்ணம்.

(தொடரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# இணையவழி மதுபான விற்பனை சட்டத்துக்கு முரணான ஒன்று!

## இலங்கை மருத்துவ சங்கம் பிரதமருக்குக் கடிதம்

நாட்டின் புகைப்பொருள் மற்றும் கலால் சட்டத்தின் கீழ் இணையவழியூடாக மதுபானங்களை விளம்பரப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில் தற்போது இணைய வழியூடாக மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கியுள்ளமை நாட்டின் சட்டத்துக்கு அப்பாற்பட்டதாகவே காணப்படும் என்று குறிப்பிட்டு அரச மருத்துவ சங்கம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு அதனால் அரசாங்கமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் மருத்துவ சங்கம் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இணைய வழியூடாக மதுபான விற்பனைக்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது. அதனையடுத்து இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன மற்றும் அந்த சங்கத்தின் புகைப்பொருள் , மதுபானம் மற்றும் போதைப்பொருள் நிபுணர் குழுவின் தலைவர் பேராசிரியர் நாரதா வர்ணசூரிய ஆகியோரின் கையெழுத்துக்களுடன் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு–

இணையவழியூடாக மதுபான விற்பனைக்கு நிதி அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார் என மது வரி திணைக்களம் அறிவித்துள்ள விடயம் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய பல்பொருள் அங்காடிகளின் விநியோக சேவைகள் மூலம் மதுபான விற்பனையை செயல்படுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளமையை இலங்கை மருத்துவ சங்கம் எதிர்க்கின்றது.

பொது மக்களின் உடல்நலம் மற்றும் பொருளாதார தாக்கங்கள் உள்ளிட்டவை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ள இலங்கை மருத்துவ சங்கம், மதுபானங்களை இணையவழியூடாக விற்பனை செய்ய அனுமதிப்பதன் அபாயங்கள் தொடர்பாகச் சங்கம் எச்சரிக்கிறது.

இந்த மிகக் கடினமான காலகட்டத்தில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் மது விற்பனைக்கான அனுமதியை ரத்து செய்வதற்கு நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களை தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்தத் தீர்மானம் உடல்நலம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு கடந்த சில வாரங்களில் இது ஒரு பெரிய நிவாரணமாக அமைந்திருந்தது.

2006 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புகையிலை மற்றும் கலால் சட்டம் இணையத்தில் மதுபானங்களை விளம்பரப்படுத்துவதை வெளிப்படையாக தடைசெய்கிறது என்பதை மதுவரி திணைக்களம் அறிந்திருக்கும் என்று கருதுகிறோம்.

அவ்வாறிருக்கையில் இணைய விற்பனை இந்த நாட்டில் மது விற்பனைக்கு வரையறுக்கப்பட்ட வயது, நேரம் மற்றும் இட கட்டுப்பாடுகளையும் மீறும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எனவே இணையவழியூடான மதுவிற்பனை செயற்பாடானது நாட்டின் சட்டத்திற்கு அப்பால் பட்டதாகவே காணப்படும்.

கடந்த இரு வாரங்களில் சட்ட விரோத மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் மதுவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

எனவே இதுகுறித்த தரவுகளை மதுவரி திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் ஆதாரங்களுடன் வெளிப்படுத்த வேண்டும். அத்தோடு அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுபக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வான நிலையில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மருத்துவ நலனைக் கருத்திற் கொண்டு தற்போது இணையவழியூடாக மதுபானத்தை விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

மதுபான பாவனை பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும், அதன் மூலமான பாதிப்புக்களுக்கும், தற்கொலைகளுக்கும் அடிப்படை காரணியாக அமைகிறது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு அதனால் அரசாங்கமும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.– என்றுள்ளது.

# அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் பொருத்தமற்றது

## ஆளும் கட்சி எம்.பி. சான் விஜயலால் காட்டம்

எரிபொருள் விலை அதிகரிப்பை வலு சக்தி அமைச்சர் மாத்திரம் பொறுப்பேற்று அவர் பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எரிபொருள் விலை அதிகரித்துள்ளமைக்கான பொறுப்பினை முழு அரசாங்கமும் ஏற்கவேண்டும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியிலும், சுகாதார ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பது பொருத்தமற்ற செயற்பாடாகும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சான் விஜயலால் தெரிவித்தார்.



அம்பலாங்கொட பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. விலையேற்றத்தின் பொறுப்பை ஏற்று சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிக்கை வெளியிடுவதும் –

அந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்து சாகர காரியவசத்துக்கு சவால் விடுத்து அவரை பதவி விலக சொல்வதும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கும்.

எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதன் பொறுப்பை வலு சக்தி அமைச்சர் ஏற்று அவர் பதவி விலக வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையின் பொறுப்பை முழு அரசாங்கமும் ஏற்கவேண்டும்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக பொருளாதார ரீதியிலும், உளவியல் ரீதியிலும் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவை ஆகியவற்றின் கட்டணத்தை அதிகரிப்பது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடாகும். மக்களும் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள்.

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான காலம் இதுவல்ல என்பதை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற அடிப்படையில் எடுத்துரைத்துள்ளோம். எரிபொருள் விலை அதிகரிப்பு தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். – என்றார்.

# பால்மாவின் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

இலங்கையில் முழுமை பால்மா இறக்குமதியாளர்கள் எதிர்காலத்தில், ஒரு கிலோ முழுமைப் பால்மா பக்கெட்டின் சில்லறை விலையை 350 ரூபாவால் உயர்த்தவும், 400 கிராம் பக்கெட்டை 140 ரூபாவால் உயர்த்தவும் ஆலோசித்து வருகின்றனர்.

அவர்கள் ஏற்கனவே இது தொடர்பில் கோரிக்கையை நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அனுப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய கொள்வனவுகளை வரவழைப்பதற்கு இந்த விலை அதிகரிப்பு மிக முக்கியமானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பாக முறையான கோரிக்கை நுகர்வோர் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு, மொத்த விற்பனை விலையில் 32 சதவீதமாக மட்டுமே இருக்கும் என்று இறக்குமதியாளர்கள் அறிவித்துள்ளனர் விலை அதிகரித்தவுடன், ஒரு கிலோ மற்றும் 400 கிராம் பக்கெட் 1,295 ரூபா மற்றும் 520 ரூபாவுக்கு விற்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

உலகளவில் முழு ஆடை பால்மாக்கான தேவை அதிகரித்துள்ளது. தற்போதைய நிலையில் 4 முதல் 6 வாரங்களுக்கு மட்டுமே கையிருப்பு போதுமானதாக இருப்பதால் ஜுலை இறுதியில், புதிய கொள்வனவுக்கான கட்டளைகளை அனுப்பவேண்டியுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

ஆகையால், தாம் வர்த்தக அமைச்சகத்திலிருந்து விரைவான பதிலை எதிர்பார்ப்பதாக இறக்குமதியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

## வவுனியா நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளோம் என வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபைத் தலைவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், எந்தவித முன்னறிவித்தலுமின்றி நகரசபைத் தலைவரான என்னை பொலிஸ் நிலையம் அழைத்து கைதுசெய்தனர்.

பொலிஸாருடைய செயற்பாடு பக்கச்சார்பான செயற்பாடாகவே இருந்தது. அதிகாரபலமும் அரசியல், பணபலமும் இருந்தால் எதையும் செய்யலாம் என்ற நிலைமையை என்னால் அறியமுடிந்தது.

எனவே சாதாரண மக்களுக்கான நீதி இந்த பொலிஸ் நிலையங்களில் எப்படி கிடைக்கும் என்பது கேள்வியாகவுள்ளது. அத்துடன் எமது உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு




விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பொலிஸாரின் அசமந்தப் போக்கே.

தனிப்பட்ட நபர்களுக்காக அரச உத்தியோகத்தர்களைக் கைதுசெய்வதும், அச்சுறுத்துவதும் எந்தவகையில் நியாயமான செயற்பாடாக இருக்கமுடியும். இப்படியான பொலிஸாரால் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கே அவமானம் ஏற்பட்டுள்ளது.

ஒரு நீதிபதியை போல வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி எனக்கு பதிலளித்தார். பொலிஸ் நிலையம் நீதிமன்றம் போலவே இயங்குகின்றது. எனவே, பொலிஸாரின் அசமந்தப்போக்கு மற்றும் அரசியல் பின்னணியில் பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் பொலிஸ்சேவை ஆணைக்குழுவிற்கு இது தொடர்பாக முறைப்பாடு ஒன்றை வழங்கியுள்ளோம். வடமாகாண ஆளுநர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாட்டைப் பதிவுசெய்யவுள்ளோம்.

அத்துடன் குறித்த விடுதியினூடாக நகரசபைக்கு சேரவேண்டிய மிகுதி பணத்தை நீதிமன்றமூடாகப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம். வாடிவீடு என்பது நகரசபையின் சொத்து. அதனை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானங்களையும் எடுத்துள்ளோம்.

குறித்த விடுதிக்கு அருகில் பிரபல பாடசாலை மற்றும் இந்து இளைஞர் சங்கம்,சாய்பாபா மடம் மற்றும் நீதிபதியின் வதிவிடம் ஆகியன அமைந்துள்ளன.

எனவே குறித்த இடத்தில் மதுபானசாலை ஒன்று தேவையில்லை என்று நாம் கருதுகின்றோம். எனவே வேறு பொது விடயங்களுக்காக அந்த இடத்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

காலப்போக்கில் அது சரிவரும். அத்துடன் மதுபானத்தை விற்று குடியைகெடுக்கும்செயலைநகரசபை செய்யாது. –எனத் தெரிவித்துள்ளார்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | சுட்டிகள் | அலகு 10




பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எண் | சுட்டி வடிவம் | அடி | சுட்டி |
|---|---|---|---|
| உதாரணம் 8 | $2X2X2=2^3$ | 2 | 3 |
| 9 | ...................... | .................. | ................ |
| 16 | ...................... | .................. | ................ |
| 125 | ...................... | .................. | ................ |
| ...................... | ...................... | 5 | 4 |
| ...................... | ...................... | 2 | 10 |
| ...................... | $10^3$ | .................. | ................ |
| ...................... | $12^2$ | 12 | ................ |
| 1024 | $4^5$ | .................. | ................ |
| 729 | ...................... | 3 | ................ |

2. பின்வரும் ஒவ்வொரு கோவையையும் பெருக்கமாக விரித்து எழுதுக.

1. 3ab = ....................................
2. 5pqr = ....................................
3. $7ab^2$ = ....................................
4. abc = ....................................
5. $2p^2$ = ....................................
6. $3x2^2$ = ....................................
7. $2p^3q^2$ = ....................................
8. $4^2xn^3$ = ....................................
9. 52x2y2 = ....................................
10. $3^2a^3b^2c^3$ = ....................................

3. பின்வரும் ஒவ்வொரு எண்ணையும் முதன்மை எண்களை அடியாகக் கொண்ட வலுக்களின் பெருக்கமாக எழுதுக.

11. 8 = ....................................
12. 12 = ....................................
13. 20 = ....................................
14. 27 = ....................................
15. 48 = ....................................
16. 100 = ....................................
17. 144 = ....................................
18. 225 = ....................................
19. 343 = ....................................
20. 729 = ....................................

**வலுவின் வலு**

**உதாரணம்**

a,b,c,n என்பன நேர்நிறை எண்கள் எனின்,

**உதாரணம்**

$(ab)^n = a^n x\, b^n$

$(abc)^n = a^n x\, b^n x\, c^n$

$$(ab)^3 = abx\ abxab$$
$$= axbxaxbxaxb$$
$$= axaxaxbxbxb$$
$$= a^3 \ x\ b^3$$
$$= a^3b^3$$

1.வலுக்களின் பெருக்கமாக தருக.

1. $(3x)^3$ = ....................................
2. $(3ab)^3$ = ....................................
3. $(5a)^2$ = ....................................
4. $(8p)^2$ = ....................................
5. $(4y)^3$ = ....................................
6. $(2k)^4$ = ....................................
7. $(3x)^5$ = ....................................
8. $(xy)^5$ = ....................................
9. $(7p)^4$ = ....................................
10. $(10m)^2$ = ....................................
11. $(4xy)^3$ = ....................................
12. $(pqr)^5$ = ....................................
13. $(2abc)^8$ = ....................................
14. $(abx)^5$ = ....................................
15. $(10t)^6$ = ....................................
16. $(2x7)^2$ = ....................................
17. $(2x3x11)^3$ = ....................................
18. $(2x4xX)^4$ = ....................................
19. $(4xpxq)^7$ = ....................................
20. $(4xax2xb)^2$....................................

2.பெருக்கத்தின் வலுவாக தருக.

1. $5^3\ x\ 2^3$ = ....................................
2. $5^2\ x\ 10^2$ = ....................................
3. $x^2\ x\ y^2$ = ....................................
4. $100m^2$ = ....................................
5. $25\ a^2$ = ....................................
6. $36\ b^2$ = ....................................
7. $49a^2\ b^2$ = ....................................
8. $8y^3$ = ....................................
9. $225t^2$ = ....................................
10. $1000p^3$ = ....................................

3. பெறுமானம் காண்க.

1. $(2x5)^2$ = ....................................
2. $(2x3)^5$ = ....................................
3. $(11x2)^3$ = ....................................
4. $(5x7)^3$ = ....................................
5. $(10x6)^2$ = ....................................
6. $(3x5x2)^3$ = ....................................
7. $2x(3x4)^2$ = ....................................
8. $(3x7x2)^3x5$ = ....................................
9. $2^2\ x(3x2)^3$ = ....................................
10. $(2^2\ x3)^2$....................................

**மறை நிறை எண் ஒன்றின் வலு**

மறை நிறைஎண்கள் - 1, -2, -3,... ஆகும்.

| | |
|---|---|
| $2^1 = 2$ | $(-2)^1 = (-2)$ |
| $2^2 = 2x2 = 4$ | $(-2)^2 = (-2)\ x\ (-2) = 4$ |
| $2^3 = 2x2x2 = 8$ | $(-2)^3 = (-2)x(-2)x(-2) = (-8)$ |
| $2^4 = 2x2x2x2 = 16$ | $(-2)^4 = (-2)x(-2)x(-2)\ x(-2) = 16$ |

* ஒரு நேர்நிறை எண்ணில் எந்தவொரு வலுவினதும் பெறுமானம் நேர் பெறுமானமாகும்.
* ஒரு மறை நிறை எண்ணில் ஒற்றை வலுவின் பெறுமானம் மறை பெறுமானமாகும்.
* ஒரு மறை நிறை எண்ணில் இரட்டை வலுவின் பெறுமானம் நேர் பெறுமானமாகும்.

உ+ம் :-

1. $(-3)^4$ இன் பெறுமானம் யாது?

$(-3)x(-3)x(-3)x(-3) = (81)$

2) $(-4)^3$ இன் பெறுமானம் யாது?

$(-4)x(-4)x(-4) = (-64)$

3) $(-2)^4$ இன் பெறுமானம் யாது?

$(-2)x(-2)x(-2)\ x(-2) = 16$

**பயற்சி**

**1.பெறுமானம் காண்க**

| | |
|---|---|
| 1. $(-1)^2$ = .................................... | $(-1)^0$ = .................................... |
| 2. $(-1)^5$ = .................................... | $(-4)^3$ = .................................... |
| 3. $(-1)^{1001}$ = .................................... | $(-2)^4$ = .................................... |
| 4. $(-1)^{202}$ = .................................... | $(-5)^3$ = .................................... |
| 5. $(-4)^2$ = .................................... | $(-4)^3$ = .................................... |
| 6. $(-5)^3$ = .................................... | $(-5)^2$ = .................................... |
| 7. $(-10)^4$ = .................................... | $(-2)^2$ = .................................... |
| 8. $(-6)^1$ = .................................... | $(-1)^{1012}$ = .................................... |
| 9. $(-2)^7$ = .................................... | $(-1)^{22}$ = .................................... |
| 10. $(-3)^5$ = .................................... | $(-1)^{2012}$.................................... |

02. பெருக்கமாகத் தரப்பட்டதை சுட்டிவடிவில் எழுதுக.

1. $2x2x\ 2\ x\ 2x\ 2 = 2^5$
2. 3x3x3x3 = ....................................
3. axaxaxaxaxa = ....................................
4. 2x2x2xyxy = ....................................
5. 5x5xmxmxmxaxa = ....................................
6. 2x2x2x2x2x2xpxp = ....................................

03. பெருக்கத்தின் வலுவை வலுக்களின் பெருக்கமாக எழுதுதல்

1. $(2\ x3\ x\ 5)^4 = 2^4x3^4\ x\ 5^4$
2. $(3xy)^{10}$ = ....................................
3. $(2xax\ b)^{12}$ = ....................................
4. $(5x2xx)^6$ = ....................................
5. $(mxax\ b)^5$ = ....................................
6. $(ax\ b)^5$ = ....................................

04. வலுக்களின் பெருக்கத்தை பெருக்கத்தின் வலுவாக எழுதுதல்.

1. $m^8\ x\ y^8 = (mxy)^8 = (my)^8$
2. $m^8xn^8$ = ....................................
3. $5^6xy^6xm^6$ = ....................................
4. $2^{10}x\ y^{10}x\ a^{10}$ = ....................................
5. $5^6xp^6xq^6$ = ....................................
6. $2^4xa^4xb^4$ = ....................................

05. ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. $2^3, (-10)^1, (-1)^{10}, 3^2$ = ....................................
2. $(-2)^4\ , (-2)^5, (-1)^4\ , (-1)^5$ = ....................................

**ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# பிறிதொரு தினத்திலே ஜனாதிபதியை சந்திக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு

## தமிழரசு மட்டு. மாவட்ட வாலிபர் முன்னணி செயலர் தெரிவிப்பு



புதிய அரசமைப்பு யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகளுக்கும் இடையிலான சந்திப்பு பிற்போடப்பட்டிருக் கிறதே ஒளிய, சந்திப்பு தவிர்க்கப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் மட்டக் களப்பு மாவட்ட வாலிபர் முன்னணியின் செயலாளர் கணேசமூர்த்தி சசீந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைமைகளுக்கும் இடையில் ஏற்பாடாகியிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்தாகியுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மட்டக்களப்பு வாலிபர் முன்னணியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

புதிய அரசமைப்பு வரைவு தொடர்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் எங்களது கட்சியின் யோசனைகளைக் கடந்த வருட இறுதி பகுதியில் புதிய அரசமைப்பு வரைவு குழுவிடம் கையளித்திருந்தோம்.

அது முதலாம் கட்ட நடவடிக்கை, அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட நடவடிக்கையாக புதிய அரசமைப்பு வரைவுநிபுணர் குழுவை எமது தலைமைகள் சந்தித்திருந்தன. அதன் நிமித்தமாக மூன்றாம் கட்ட நடவடிக்கையாக புதிய அரசமைப்பு யோசனைகள் தொடர்பாக இந்த நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக ஒழுங்குகள் நடைபெற்றிருந்தன.

குறித்த சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்தாகியுள்ளது. சந்திப்பு பிறிதொரு தினத்துக்குப் பிற்போயுள்ளதே தவிர வேறேதுமில்லை. ஜனாதிபதி செயலகம் இன்னுமொரு தினத்தில் எமது தலைமைகளை ஜனாதிபதி சந்திப்பதாகக் கூறியுள்ளது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்ற அந்த நிலையிலே தான் இந்த சந்திப்பு நிகழவிருந்தது என்பது மறுக்கவியலாது.

அந்த வகையில் ஜனாதிபதியுடனான சந்திப்பு நிகழ்ந்திருந்தால் நிச்சயமாக ஆரோக்கியமான முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கான சூழல் ஏற்பட்டிருக்கும்.

தொடர்ந்து எமது தலைமைகள் ஜனாதிபதியுடன் எம் மக்களின் அபிலாஷைகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பேச வேண்டும் பேசுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# பேராசிரியர் மோகான் முனசிங்க 2021 ப்ளூ பிளானட் விருதுக்கு தெரிவு



இலங்கை இயற்பியலாளரும், பொருளாதார நிபுணருமான பேராசிரியர் மோகான் முனசிங்க இந்த ஆண்டின் 'ப்ளூ பிளானட்' விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

சுற்றுச்சூழலுக்கான நோபல் விருதுக்கு சமமான மிக உயர்ந்த சர்வதேச விருதான ப்ளூ பிளானட் விருது இவ்வாண்டு 30 ஆவது முறையாக வழங்கப்படுகிறது.

உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியதற்காக பணிப்பாளர்கள் குழு 2021 ஆம் ஆண்டுக்கான இரண்டு விருது பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

அந்த இருவரும் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் மோகன் முனசிங்க மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் வி. இராமநாதன் ஆவர்.

மோகன் முனசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான குழுவின் துணைத் தலைவராக, 2007 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொண்டார். அவ்வாறு செய்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

அவரது கருத்துக்கள் சுற்றுச்சூழல் மற்றும் நிலையான வளர்ச்சி தொடர்பாகப் பல முக்கிய உலகளாவிய ஒப்பந்தங்களுக்கு பங்களித்தன.

இந் நிலையில் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த பேராசிரியர் முனசிங்க –

ஆசாஹி கிளாஸ் அறக்கட்டளையின் சிறந்த எதிர்காலத்துக்கான அர்ப்பணிப்பைக் குறிக்கும் வகையில், உலகளாவிய சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான முதன்மையான 2021 ப்ளூ பிளானட் விருதை பெற்றதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாகவும் பெருமைப்படுகிறேன்.

'ஆசிரியர்கள், வழிகாட்டிகள், சகாக்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் உட்பட எனது அறிவுசார் வளர்ச்சி மற்றும் உணர்ச்சி நுண்ணறிவுக்கு தாராளமாக பங்களித்த பலருக்கும் நான் கடன்பட்டிருக்கிறேன்'. – என்றார்.

# அரசாங்கத்தின் மீது சு.கட்சி குற்றச்சாட்டு



அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்த நிலையிலேயே ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளதாக அந்தக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

அரசாங்கத்திற்குள் தற்போது எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது பற்றிக் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் –

'அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அரசாங்கத்தின் பிரச்சினையாகும்.

எனினும், அரசாங்கத்திலுள்ள கூட்டணியில் காணப்படுகின்ற பிரச்சினைகளே இன்று வெளிப்பட்டுள்ளன. காரணம் அரசாங்கத்தின் பங்காளின் கட்சியொன்றின் தலைவர் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்படுகிறது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் இந்த செயற்பாட்டை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். எரிபொருள் கொள்வனவு செய்ய நிதியில்லை என்று கூறுபவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்யத் தயாராகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராகவே பேச வேண்டும். அரசாங்கத்தின் அரசியல் முரண்பாடுகளே தற்போது வெளிப்பட்டுள்ளன. பொருளாதாரப் பிரச்சினைகளே அரசியல் முரண்பாடுகளாகியுள்ளன.

இந்த அரசியல் முரண்பாடுகள் எதிர்காலத்தில் எவ்வாறு தொடரும் என்று தெரியாது. கம்மன்பில கூறியமையைப் போன்று அரசாங்கத்திற்குள்ளேயே அதனை சீரழிப்பதற்கான எதிரிகள் உள்ளனர் என்பது உண்மை. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 08 | கணிதம் | அலகு 10

01. நிறைவர்க்க எண்கள்

1.5X5 = 25
2.6X6 = 36
3.7X7 = 49
4.8X8 = 64
5.9X9 =81
6.10X10 = 100
7.11X11 = 121
8.12X12 =144
9.13X13 = 169
10.14X14 = 196
11.15X15 =225
12.16X16 = 256
13.20X20 = 400
14.25X25 = 625
15.100X100 =10000

02.
1. 107 (X)
2. 121 (✓)
3. 34 (X)
4. 68 (X)
5. 957 (X)
6. 45 (X)
7. 225 (✓)
8. 144 (✓)
9. 104 (X)
10. 196 (✓)

02.

| எண் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிறைவர்க்க எண் | 1 | 4...... | 9 | 16...... | 25...... | 36....... | 49 | 64....... | 81....... | 100 |
| நிறைவர்க்க எண் ஒன்றின் ஒன்றினிடத்து இலக்கம் | 1...... | 4 | ..9.. | 6 | ....5 | ..6.. | ....9 | 4 | ....1 | 0 |

03

1.1,4,9,16,25,36,49,64,81,100

2.நேர்முழு எண் ஒன்றை அதே எண்ணால் பெருக்கும் போது பெறப்படும் எண்
(4,9,16,25,144, 225...)

3.பரப்பு - 9X9 = 81

4.64, 81, 100

5.1,4,5,6,9,0

6.இல்லை
7 நிறைவர்க்க எண்ணின் இறுதி இலக்கமாக அமையாது.

7.121

8.8

9.12

10.11m

பயிற்சி 4
1.1,2,3,5,11,13....
2.2X2X2X2
3.
1.30
2.6$\sqrt{3}$
3.3$\sqrt{5}$
4.15

4.
1.25
2.30
3.14
4.20
5.19
5.$12^2 - 4^2 = (12+4)(12-4)$
$12^2 - 4^2 = 144 - 16 = 128$
$(12+4)(12-4) = 16 \times 8 = 128$
$12^2 - 4^2 = (12+4)(12-4)$

**ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)**
**யா/செங்குந்த இந்துக் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் கட்டடத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்த தொழிலாளிக்கு கொரோனா

கட்டட வேலையில் ஈடுபட்டபோது, மேல் தளத்திலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்த தொழிலாளிக்குக் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

அச்சுவேலியில் நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்., நாயன்மார்கட்டைச் சேர்ந்த நவரத்தினம் அன்ரன் ஜெயராஜா (வயது - 36 ) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

கட்டடத்தின் மேல் தளத்தில் சன்செட்டுக்கு தூண் போடும் பொழுது தவறி கீழே வீழ்ந்த அவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், அவரின் சடலம் மீதான பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அவரது சடலம் யாழ்., கோம்பயன் மணல் மயானத்தில் மின்தகனம் செய்யப்படவுள்ளது.

# புத்தளம் கரையில் திடீரென 2 இந்திய மீன்பிடிப் படகுகள்!

## வந்தவர்களைத் தேடி வேட்டை



**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,ஜூன் 17

இந்திய மீன்பிடிப் படகுகள் இரண்டு இன்று அதிகாலை புத்தளம் கடற்கரையில் ஏற்றப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்துத் தேடுதல் இடம்பெறுகின்றது.

தமிழ்நாடு கன்னியாகுமரியைச் சேர்ந்தவருக்கு சொந்தமான இரு படகுளே இன்று அதிகாலை புத்தளம் கரையில் காணப்பட்டது.

படகுகளில் எவருமே இல்லாத போதும் படகுகள் பத்திரமாகக் கரை ஏற்றப்பட்ட நிலையில் இருப்பதனால் படகு மூலம் எவராவது உள் நுழைந்தனரா என்ற சந்தேகம் கடற்படையினருக்கு எழுந்துள்ளது.

இதன் காரணமாக படகு அவதானிக்கப்பட்ட பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் தேடுதல் பணிகள் இடம்பெற்றன.

---

### புயலில் சிக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்ட சமயம் புயலில் சிக்கி காணாமல் போனவை எனப் பதியப்பட்ட படகுகள் என்று தமிழ்நாடு செய்திகள் தெரிவிக்கின்றன. (முன்னர் வந்த செய்தி 12 ஆம் பக்கத்தில்)

குளச்சலைச் சேர்ந்த சிபி S/O சக்கிரியாஸ் என்பவருக்கு சொந்தமான IND - TN - 15- MM- 4557 என்ற இலக்கம் கொண்ட 'அன்னை வேளாங்கண்ணி' என்ற விசைப்படகில் கேரளா கொச்சின் துறைமுகத்திலிருந்து வள்ளவிளையைச் சேர்ந்த 8 பேரும், கேரளா புதிய துறையை சேர்ந்த 3 பேருமாக மொத்தம் 11 பேர் சேர்ந்து மீன்பிடித்தொழிலுக்காக ஏப்ரல் 18 ஆம் திகதி கடலுக்குச் சென்றார்கள். மே 11 ஆம் திகதி கோவா ஆழ்கடலில் மீன்பிடித்தொழில் செய்து கொண்டிருக்கும் போது TAUKTAE புயல் வருவதாக தகவல் தெரிந்ததும் உடனடியாக பல மீனவர்களும் தத்தமது படகுகளுடன் கரை திரும்பினர்.

இதன் போது லட்சத்தீவு அருகே பயணித்த சமயம் புயல் வேகமாக வீசியதால் விசைப்படகில் கட்டியிருந்த விசைப்படகு உரிமையாளரின் IND - TN - 15 - Mo - 8304 என்ற நாட்டுப்படகும், மீன்பிடித் தொழிலிக்கு வந்த சர்லிங் S/O பனியடிமை என்பவரின் IND - TN - Mo - 6225 'பாலகன்' என்ற நாட்டுப்படகும் மற்றும் அன்ரனி ஜோஸ் S/O வர்க்கீஸ் IND - TN- 15- Mo-8354 'சிந்து மாதா' என்ற நாட்டுப்படகுமாக் மொத்தம் 3 நாட்டுப்படகுகள் கயிறு அறுந்து புயலில் அடித்துச் செல்லப்பட்டன எனவும் புயல் மிகவும் வேகமாக அடித்ததால் நாட்டு படகுகளை மீட்க முடியாமல் மே 21 ஆம் திகதி மீனவர்கள் தேங்காய்பட்டிணம் மீன்பிடித்துறைமுகத்திற்கு திரும்பியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

தற்போது விசைப்படகு உரிமையாளர் சிபி மற்றும் சர்லிங் என்பவர்களின் நாட்டுப்படகுகளே புத்தளம் பகுதியில் கரை ஏற்றப்பட்டுள்ளன எனத் தமிழ்நாட்டுத் தகவல் தெரிவிக்கின்றன.

### மருத்துவபீட ஆய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பீடத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு, நேற்று பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, இயந்திரத்துக்கான ஆவணக் கோப்பை, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரவிராஜுடன் இணைந்து ஒட்டுண்ணியல் துறைத் தலைவர் மருத்துவர் ஏ.முருகானந்தனிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் திருமதி கலாமதி முருகானந்தன், உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கண்ணதாசன், மருத்துவபீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ். ரமேஷ் மற்றும் கொரோனாப் பரிசோதனை ஆய்வுகூடத்தின் மருத்துவ ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

தானியங்கி ஆர்.என்.ஏ. பிரிப்பு இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கிய புலம்பெயர் தமிழரான சுப்பிரமணியம் கதிர்காமநாதன் மற்றும் அதனை ஏற்பாடு செய்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ் நிலை வழியாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

### ஜூன் 22இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் கோப் குழுவுக்கு அழைக்கப்படவுள்ள நிறுவனங்கள் எவை என்பது குறித்தும் இதன்போது தீர்மானிக்கப்படவுள்ளது.

# இந்தியாவின் 'டெல்டா' திரிவுடன் இலங்கையில் ஐவர் அடையாளம்

இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் அதிவீரியம் கொண்ட டெல்டா (பி.1.617.2) கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஐவர் கொழும்பு, தெமட்ட கொடைப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த ஐவரும் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி டெல்டா திரிவுடன் கூடிய தொற்றாளர்கள் இலங்கையில் சமூகத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.


கடந்த முறை அடையாளம் காணப்பட்ட பி. 117 வைரஸ் பிரிவை விடவும், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள பி.1.617.2 என்ற வைரஸ் 50 வீதம் அதிக வீரியம் கொண்டது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் இந்த வைரஸ் பரவும் அபாயம் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக டெல்டா கொரோனா திரிவினால் பாதிக்கப்பட்ட இருவர் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டிருந்தனர். ஆனால், அவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த நிலையிலேயே அந்தத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதேவேளை, பிரிட்டனின் அல்பா கொரோனா வைரஸ் திரிவு தொற்று உறுதியான 8 பேர் காலி, மட்டக்களப்பு, கொழும்பு 06, கொழும்பு 08 மற்றும் கொழும்பு 10 ஆகிய இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தரமேலும் கூறியுள்ளார்.

# வெடிக்காத நிலையில் எறிகணை மீட்பு!





**(இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள வெள்ள வடிகாலிருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை யாழ். மாநகர பணியாளர்கள் துப்புரவுப் பணியை மேற்கொள்ளும்போது எறிகணையை கண்டு அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் எறிகணையை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஸ்ரான்லி வீதிக்கு அண்மையில் செல்லுகின்ற இதே பிரதான வெள்ள வடிகாலில் துப்பபுரவுப் பணியின்போது கொடிய விஷப் பாம்புகள் வெளிவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

---

### முழு அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹவுஸில் தூதுவரையும், துணைத் தூதுவரையும், அரசியல் அதிகாரியையும் சுமார் இரண்டு மணி நேரம் சந்தித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்டனர்.

தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்தியும் அதிகாரப் பரவலாக்கமும் என்ற இரட்டைத் தடத் திட்டம் குறித்து இப்பேச்சுகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

தமிழர் பிரதேசங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா ஈடுபடவிருப்பது குறித்து தூதுவர் கோபால் பாக்லே கூட்டமைப்பினருக்குத் தெளிவுபடுத்தினார்.

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை இந்தியா மேற்கொள்ளத் தயார் என்ற நிலைப்பாடு கொழும்பு அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறப்பதற்கான இராஜதந்திர அழுத்தத்தை புதுடில்லி கொடுக்கும் என்று கூறிய அவர், அந்த விமான நிலையத்தின் அடுத்த கட்ட அபிவிருத்திக்கு உதவுவதற்கான ஒதுக்கீட்டை இந்தியா செய்துவிட்டு பணிகளை முன்னெடுக்கத் தயாராகக் காத்திருக்கின்றது என்றும் கூறினார்.

காங்கேசன்துறை – காரைக்கால் மற்றும் தலைமன்னார் – இராமேஸ்வரம் படகுப் பாதைச் சேவையை ஆரம்பிப்பதிலும் இந்தியா கரிசனையாக இருப்பதாக அவர் கூறினார்.

தமிழர் பிரதேசத்துக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட வேண்டும் என்பதை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும். மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இனியும் காலம் தாமதிக்காது நடத்த வேண்டும் என இந்தியாவும் சேர்ந்து இராஜதந்திர ரீதியில் வற்புறுத்தும் எனவும் அவர் கூறினார்.

கொவிட் தொற்றால் புதுடில்லியில் அலுவலகச் செயற்பாடுகள் பல முடங்கியிருந்தமையால் இங்கு இந்திய உதவித் திட்டங்களை முன்னெடுப்பதில் சில சிக்கல்கள் இருந்தன. இனி நிலைமை சீரடைந்து விடும் எனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இந்திய உப கண்டப் பிராந்தியத்தில் வெளிச் சக்திகள் தலையீடும், விளைவுகளும் குறித்தும் இரு சாராரும் பேச்சு நடத்தினர் என்றும் அறியவந்தது. (உ)

---

### கம்மன்பிலவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளது.

எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

இந்தநிலையில், குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பிரதி, இதுவரையில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அது தங்களுக்குக் கிடைத்ததன் பின்னர், கட்சி என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கையளிப்பதற்காகச் சபாநாயகரிடம் நேரமொன்றைக் கோரியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

---

### சைக்கிளில் சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்றவர்கள் மீட்டு அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவர் உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் சடலத்தை அடையாளம் காணும் நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.